வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632


விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 04.03.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 63






மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443


MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


# கூட்டணியுடன் பேச்சுக்கு தமிழரசு முடிவெடுத்தால் சாதகமான பதில்!

## சிவஞானத்துக்கு சித்தார்த்தன் பதில் கடிதம்



யாழ்ப்பாணம், மார்ச் 04

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சம்பந்தமாக நடைமுறை சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுகளை நடத்தக் கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற் கொண்டு அறியத் தருவீர்களானால் அதுபற்றி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் நிறைவேற்று குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத் தரமுடியும் என்று அந்தக் கட்சியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் தமது விருப்பத்தைத் தெரிவித்து சி.வி.கே. சிவஞானம் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் இந்தக் கடிதத்தைத் தர்மலிங்கம் சித்தார்த்தன் அனுப்பியுள்ளார்.

இன நலன்

11

# உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு 17 முதல் 20ஆம் திகதி வரை ஏற்பு

கொழும்பு, மார்ச் 04

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை திகதி நண்பகல் 12.00 மணி வரை எற்றுக் கொள்ளப்படும் என தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஊடாக 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள், 272 பிரதேச சபைகள் என்பவற்றுக்கு, மாநகர முதல்வர்கள்,

11

## பூநகரி, மன்னார் உட்பட

# நான்கு சபைகளுக்கு தேர்தல் நடைபெறாது

கொழும்பு, மார்ச் 04

நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சிச் சபைகளில் 336 சபைகளுக்கே இப்போது தேர்தல் அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

மன்னார், பூநகரி உட்பட 4 சபைகளுக்கு தேர்தல் அறிவிப்பு விடப்படவில்லை.

காலி மாவட்டம் எல்பிட்டிய பிரதேச

11

# அரியாலையில் மனித எச்சங்கள் விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு

## அமைச்சர் சந்திரசேகர் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 04

யாழ். அரியாலை சித்துப் பாத்தி மயானத்தில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பாக நீதிமன்றம் தலையிட்டுள்ள நிலையில் , அரசாங்கம் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்கும் என அமைச்சர் இராமலிங்கம்

11

# வரி வருமானத்தை இலங்கை அதிகரிப்பது அவசியமாகும்!

## நாணய நிதியம் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 04

48 மாத நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு நான்காவது தவணையாக 334 மில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்ள, இலங்கை அதன் வரி வசூல் இலக்குகளை அடைவது அவசியம் என்று சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

வரி இலக்குகள் முறையாக செயல்படுத்தப்பட்டால், இலங்கை 900 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வரி

11

# தந்தையின் டிராக்டரில் சிக்கி 11 வயது சிறுவன் பரிதாப பலி

## உடுவில் பகுதியில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் உழவு இயந்திரத்தின் (டிராக்டர்) சில்லுக்குள் சிக்குண்டு உயிரிழந்தார்.

சுன்னாகம் - உடுவில் பகுதியைச் சேர்ந்த என்.ஆர்த்வீகன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

11

# உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பில் களமிறங்கவுள்ளது தமிழ் அரசு கட்சி?

யாழ்ப்பாணம், மார்ச் 04

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பில் களமிறங்குவதற்கு தமிழ் அரசுக் கட்சி தயாராகி வருகிறது என தெரியவருகின்றது.

இதற்கமைய கொழும்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது கொழும்புவாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தமிழ் அரசுக் கட்சி கொழும்பு மாநகர சபையில் ஆசனங்களைக் கைப்பற்றுவது தொடர்பில் கட்டம் கட்டமாக ஆலோசனை நடைபெறவுள்ளது.

இது குறித்து கட்சியின் மத்திய செயற்குழுவில்

11

# கிழக்கில் தீவிரவாத சித்தாந்தங்களை முஸ்லிம்களிடையே திணிக்க முயற்சி!

## பொது பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, மார்ச் 04

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களிடையே தீவிரவாத சித்தாந்தங்களைப் பரப்புவதற்கான முயற்சிகள் குறித்து புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த தகவல்கள் அரச புலனாய்வு சேவை மற்றும் இராணுவ புலனாய்வு ஆகிய இரண்டுக்கும் கிடைத்த தகவல்களை

11

# பிரச்னைகளுக்குத் தீர்வை அரசு பெற்றுத்தரவேண்டும்

## எரிபொருள் விநியோகஸ்தர்கள் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 04

தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தருமாறு கோரி எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலக அதிகாரியிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று காலை கூடிய அவர்கள் உரிய தீர்வு அவசியம் என வலியுறுத்தினர்.

11

# முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணமில்லை

## சிறீதரன் எம்.பி திட்டவட்டம்



கிளிநொச்சி, மார்ச் 04

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் நோக்கம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில்

11

## யாழ்ப்பாணம் சிறையில்

# இந்திய மீனவர்களை சந்தித்தார் சிறீதரன்

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது

11


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட செயலகத்தில் சனிக்கிழமை தொழில் சந்தை

- 500 பதவி வெற்றிடங்களுக்கு அன்றே நேர்காணல்
- வேலையற்ற சகல இளையோரும் பங்கேற்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணத்தில் தொழிலுக்காக காத்திருக்கும் இளையோருக்காக மாவட்ட செயலகத்தின் தொழில் நிலையம் 40இற்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மதியம் 1.30 மணிவரை மாபெரும் தொழிற் சந்தையை நடத்தவுள்ளது.

மாவட்ட செயலகத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் பங்கேற்பதற்கு தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், கணக்கியல்துறை, ஹோட்டல்கள், காப்புறுதித்துறை, ஆடைத் தொழிற்சாலை, பாதுகாப்புச்சேவை, தாதியர் வேலைவாய்ப்பு, கணினித் துறை, தொழிற்பயிற்சி நெறிகள், ஹோட்டல் முகாமைத்துவம், சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள் போன்ற நிறுவனங்கள் வருகைதரவுள்ளன. அத்துடன் தங்கள் நிறுவனத்தில் காணப்படும் 500இற்கும் மேற்பட்ட வெற்றிடங்களுக்காக அன்றையதினமே நேர்முகத்தேர்வும் நடைபெறவுள்ளது.

இந்த தொழிற்சந்தையில் தொழில்தேடும் இளையோர்கள் தங்களது தகமைகளை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் கலந்துகொள்வதன் மூலமாக தமக்குப் பொருத்தமான தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பயனடையுமாறு யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார். மேலதிக தகவல்கள் மற்றும் தொடர்புகளுக்கு 021 221 9359 என்ற தொலைபேசியூடாக தொடர்புகொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். (ஐ-05)

## 'வனமெல்லாம் புதிர்' நூலின் அறிமுக நிகழ்வு கிளிநொச்சியில்




கிளிநொச்சி, மார்ச் 04

2024ஆம் ஆண்டு சிறந்த அறிவியல் புனைகதைக்கான சாஹித்திய மண்டல பரிசு பெற்ற, ஜனகா நீக்கிலாஸ் எழுதிய வனமெல்லாம் புதிர் நூலின் அறிமுக நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சியில் உலகத் தமிழ் பண்பாட்டுக் கழக இலங்கைக் கிளையின் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நூலின் முதற் பிரதியை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பெற்றுக்கொண்டார். நூல் அறிமுக உரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் படைப்பாளியும் சமூக செயல்பாட்டாளருமான வெற்றிச்செல்வி (சந்திரகலா) ஆகியோர் நிகழ்த்தியிருந்தனர்.

படைப்பாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரின் பங்கேற்போடு நடைபெற்ற இந்நிகழ்வில், போர்க்கால அறிவியல் கண்டுபிடிப்புகளை அடையாளப்படுத்தும் வகையில் மங்கல விளக்குக்குப் பிரதியீடாக குப்பி விளக்குகள் ஏற்றப்பட்டமை பலரதும் கவனத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-05)

## மல்லாகத்தில் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், மார்ச் 04

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மல்லாகத்தில் நடைபெற்றது.

மாணவர்களுக்குச் சூழல் அறிவைப் புகட்டுவதன் மூலம் சூழல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல் பாதுகாப்பில் ஈடுபடுத்தும் நோக்குடனும் அவர்களில் பன்முக ஆளுமைகளையும் விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டததை முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே மல்லாகம் கல்லாரை கிராமத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர். இ. மிதுக்ஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கனடாவில் இருந்து வருகை தந்திருந்த ஸ்காபுறோ ஆதிபராசக்தி குருமன்றத்தின் ஸ்தாபகர் ஞானம்மா திருநாவுக்கரசு, சிறப்பு விருந்தினர்களாகத் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆசிரியர் சி. நவநீதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (ஐ)



## திருவாசக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 04

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 47 பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை இளம் சைவப்புலவர் ச. நவநீதன் 'மாணிக்கவாசகரும் திருவெண்பாவையும்' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ)

## புலம்பெயர் அனுபவத்தை பகிரும் ஓவிய கண்காட்சி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 04

'வேர்களும் தடங்களும்: புலப்பெயர்வூடும் ஞாபகத்தினூடும் ஓர் பயணம்' எனும் ஓவியக் காட்சி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியை ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையிட முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறையின் மாணவர் அமைப்பான கலை வட்டத்தின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து தென் அயர்லாந்தில் வசித்து வரும் காண்பிய கலைஞரான அனுசியா சுந்தரலிங்கத்தின் புலப்பெயர்வு அனுபவம் மற்றும் ஞாபகங்களை வெளிப்படுத்தும் படைப்புகள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

இந்தக் கண்காட்சியின் தொடராக நாளை புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கலைக் கூட கருத்தரங்கு மண்டபத்தில் கலைஞரின் உரையும் நடைபெறவுள்ளது. (ஐ)

## எரிபொருள் விநியோகத்தர்களின் 3 வீத கழிவை இரத்துச் செய்யும் முடிவு தவறு!

### ஹிஸ்புல்லா எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 04

நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மக்களைக் கருத்திற் கொண்டு வலுசக்தி அமைச்சு செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 3 சதவீத கழிவை ரத்து செய்யும் தீர்மானம் தவறானது என ஹிஸ்புல்லா கூறினார்.

உரிய தரப்பினருடன் கலந்துரையாடியே இந்த முடிவை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார்.

தற்போதைய காலகட்டத்தில் சலுகைகளை அதிகரிக்க வேண்டுமே தவிர குறைக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டார். (அ)

## உணவகம்மீது தாக்குதல்: ஒருவர் கைது!

வவுனியா, மார்ச் 04


வவுனியா நகரிலுள்ள உணவகம் ஒன்றின்மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை இரவு இந்த கைது இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகர மணிக்கூட்டு கோபுரம் அண்மையாக உள்ள உணவகம் ஒன்றுக்கு சென்ற சில இளைஞர்கள் சென்றிருந்தனர். அவர்கள் கையில் வைத்திருந்த பியர் போத்தலால் உணவகத்தின் கண்ணாடிப் பெட்டியை அடித்ததில், அது உடைந்தது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். (ஐ - 10)

## வவுனியா உணவகத்தில் வடைக்குள் இருந்த ஊசி



வவுனியா, மார்ச் 04

வவுனியாவில் உள்ள சைவ உணவகம் ஒன்றில் வாங்கப்பட்ட வடை ஒன்றுக்குள் சட்டை ஊசி ஒன்று காணப்பட்டது.

வவுனியா, பழைய பஸ் நிலையம் முன்பாக உள்ள சைவ உணவகம் ஒன்றுக்கு நேற்று சென்ற ஒருவர் அங்கு வடை கொள்வனவு செய்துள்ளார்.

குறித்த வடையை வீட்டில் சென்று சாப்பிட்டபோது அதற்குள் பெரிய சட்டை ஊசி ஒன்று காணப்பட்டது. இதனையடுத்து குறித்த வடையை அதன் முகாமையாளரிடம் காட்டி ஊசி காணப்பட்டமை தொடர்பில் தெரியப்படுத்தப்பட்டது.

தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகவும், இனிவரும் காலத்தில் இவ்வாறு நடைபெறாது எனவும் கூறி வடையை வாங்கியரிடம் சைவ உணவக முகாமையாளர் மன்னிப்பு கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.02.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், மாசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இடதுசாரிகளின் பௌத்த மறுமலச்சியா?

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை முதலாவது இடதுசாரி அரசாங்கம் என்று நோக்குபவர்கள் உண்டு. அநுர குமார திஸநாயக்க ஒரு மார்க்சிஸ்டாக இப்போது இல்லை. அவர் ஒரு யதார்த்தவாதியாகவே இருக்கிறார் என்று நோக்குபவர்களும் உண்டு.

அவர் எவ்வாறு நோக்கப்பட்டாலும்கூட, வரலாற்றில் இடதுசாரி கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு, அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இரண்டு முறை ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டுத் தோல்வியுற்ற ஓர் அமைப்பான ஜே. வி. பி. முதன்முறையாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கிறது. சிவப்பு நிறத்தைத் தங்களின் கட்சியின் நிறமாகவும் தங்களின் பணிமனைகளில் மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் ஆகியோரின் புகைப்படங்களை காட்சிப்படுத்தியிருக்கும் ஓர் அரசியல் இயக்கம் வரலாற்றில் முதல் முறையாக கொழும்பின் அதிகாரத்தைத் தங்கள் வசப்படுத்தியிருக்கிறது.

இன்றைய சூழலில் தூய இடதுசாரிகளாக அதிகாரத்தில் இருப்பது என்பது ஓர் அழகிய பகல் கனவு மட்டுமேயாகும். இன்றைய உலக அரசியல் ஒழுங்கில் அவ்வாறு இருக்கவும் முடியாது. ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களை ஒப்பீட்டடிப்படையில் வித்தியாசமானவர்களாக முன்னிறுத்தியவர்கள். அதிகாரத்தைக் கையாள்வதிலும் - மக்கள் நலனுக்கான கோரிக்கைகளிலும் தங்களை ஏனைய எந்தவொரு கட்சிகளை விடவும் வித்தியாசமானவர்களாகக் காட்டிக் கொண்டவர்கள் - இப்போதும் தங்களை அவ்வாறே சித்தரித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், நடைமுறையில் இடதுசாரித்துவத்துக்கு நெருக்கமாக இருப்பதை விடவும் சிங்கள பெரும்பான்மையை கட்டிப்போடுவதற்கு பயன்படும் ஜனரஞ்சக வாதத்துக்கே ஜே. வி. பியும் - அதன் தலைமையில் முகங்காட்டும், தேசிய மக்கள் சக்தியும் இயங்கி வருகின்றன - என்று கூறக் கூடியளவுக்கே அவர்களின் அணுகுமுறைகள் வெளித்தெரிகின்றன.

இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் போவதாக அநுர குமார திஸநாயக்க பௌத்த மதபீடாதிபதிகளின் முன்னிலையில் கூறுகின்றார். பௌத்த மறுமலர்ச்சி என்பதால் சுட்டிக்காட்டப்படுவது என்ன? ஏனைய அரசாங்கங்களுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் பௌத்தத்தை நோக்குவதிலுள்ள வேறுபாடு என்ன? அப்படியொரு வேறுபாடு உண்மையிலேயே இருக்கிறதா?

இலங்கையின் இன அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் பௌத்தம் ஓர் இன ஐக்கியத்துக்கான, பரஸ்பர கௌரவத்துக்கான ஒரு கருவியாகத் தொழிற்படவில்லை. மாறாக, இனங்களுக்கிடையில் குரோதங்களையும் வெறுப்புணர்வையும் விதைப்பதற்கே பயன்பட்டிருக்கிறது. உண்மையில் இது புத்தரின் போதனைகளுக்கு எதிரானது. புத்தரின் போதனையான தம்மபதமானது அன்பு அன்பை விதைக்கும், வெறுப்பு வெறுப்பை விதைக்கும் என்று போதிக்கிறது. ஆனால், நடைமுறையில் புத்தரின் உண்மையான போதனைகளுக்கு மாறாகவே, இலங்கையின் பௌத்தம் கையாளப்பட்டிருக்கிறது. இந்தப் பின்புலத்தில் அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் எவ்வாறானதொரு பௌத்த மறுமலர்ச்சியை முன்கொண்டுவர முயற்சிக்கிறது. முன்னைய வெறுப்புவாதத்தின் ஊற்றாக இருந்த அந்த பௌத்தத்தையா அல்லது புத்தரின் போதனைகளுக்கு அமைவான பௌத்தத்தை - அதன் உண்மையான அர்த்தத்தில் மீடடெடுக்கும் மறுமலர்ச்சியா?

# புத்தாண்டில் சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்கள்!

கொழும்பு, மார்ச் 04

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அமைவான கொள்கை தீர்மானங்களை எடுப்பதற்காக விவசாய, கால்நடை வளம், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த மற்றும் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க ஆகியோர் மற்றும் உணவு கொள்கைகள் மற்றும் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் நான்காவது முறையாகவும் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று கூடினர்.

அதன்படி எதிர்வரும் சித்திரை புத்தாண்டு காலத்தில் மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி சலுகை விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பது தொடர்பில் நீண்ட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், நாட்டுக்குள் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொகை சேகரிப்பு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது.

நுகர்வோரும்,விவசாயிகளும் உற்பத்தியாளர்களும் பாதுகாக்கப்படும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

குறிப்பாக கால்நடை உணவு உற்பத்திக்கான சோள இறக்குமதிக்கு ஏப்ரல் முதலாம் திகதிக்கு பின்னர் அனுமதி வழங்கவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

சோள இறக்குமதியின் போது புதிய முறைமையொன்றின் தேவையை வலியுறுத்திய விவசாய,கால்நடை,காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டீ.லால்காந்த, அது நடைமுறைப்படுத்தப்படும் வரையில் பழைய முறையை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார்.

பல்வகைத்தன்மையான உணவுகளை தெரிவு செய்ய பிரஜைகளுக்கு இருக்கின்ற உரிமையை உரிதுப்படுத்தல் மற்றும் உயர் தரத்திலான உற்பத்திகளை கொள்வனவு செய்ய வாய்ப்பளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை அனைத்து பிரஜைகளுக்காகவும் பாதுகாப்பான, சுகாதாரமான மற்றும் நிலையான உணவு விநியோகத்தை உறுதிப்படுத்தும் அரச கொள்கையை நனவாக்கிக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே உணவு கொள்கை மற்றும் பாதுகாப்பு குழுவின் நோக்கமாகும்.

இதில் பிரதமரின் செயலாளர் ஜீ.பீ.சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார உள்ளிட்டவர்களும் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட உணவு கொள்கை மற்றும் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர். (அ)

# நடுக்கடலில் தத்தளித்தது நாகை - காங்கேசன் கப்பல்

சென்னை, மார்ச் 04

இந்தியாவின் நாகப்பட்டினத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணித்த பயணிகள் கப்பல் திடீரென கடல் சீற்றத்தால் நடுக்கடலில் தத்தளித்ததாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன்போது கப்பலில் 17 ஊழியர்கள் உட்பட 95 பேர் பயணம் செய்துள்ள நிலையில் பயணிகள் கூச்சலிட்டதால் கப்பல் பாதியிலேயே நாகை துறைமுகத்துக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு இயக்கப்பட்டு வந்த பயணிகள் கப்பல் சேவை வானிலை மாற்றம், சர்வதேச தொழில்நுட்ப அனுமதி உள்ளிட்ட காரணங்களால் கடந்த ஆண்டு நவம்பர் 18ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இதைதொடர்ந்து கடந்த மாதம் 22ஆம் திகதி முதல் மீண்டும் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் கடல் காற்று அதிகமாக வீசுவதால் பயணிகள் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

வானிலை மாற்றம் சீரடைந்ததும் மீண்டும் மார்ச் முதலாம் திகதி முதல் நாகப்பட்டினம்-இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகள் கப்பல் கடந்த முதலாம் திகதி காலை 7.30 மணிக்கு 78 பயணிகளுடன் புறப்பட்டது.

வேளாங்கண்ணிக்கு தென்கிழக்கே 15 மைல்கல் தொலைவில் கப்பல் சென்றபோது கடல் சீற்றம் அதிகமான நிலையில் கப்பல் கடலில் தத்தளிக்க ஆரம்பித்ததால் பயணிகள் கூச்சலிட்டுள்ளனர். வானிலை மோசமானதைத் தொடர்ந்து கப்பலை அவசரமாக நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு கப்பலின் கப்டன் திருப்பியுள்ளார். இதை தொடர்ந்து நேற்று முந்தினமும் நேற்றும் கப்பல் போக்குவரத்து ரத்துச் செய்யப்படுவதாக கப்பல் நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய ராசிபலன்

மார்ச் -04 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - மாசி 20
நல்ல நேரம்:7.3l-9.00
ராகு காலம்:3.00 -4.30
திதி :பஞ்சமி

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாரை நம்புவது என்கிற மன குழப்பத்திற்கு ஆளாவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**இடபம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள்.பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக் குறை நீடிக்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மிதுனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள்.

**கடகம்**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள்.குடும்பத்தில் அமைதி திரும்பும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். புது ஏஜென்சி எடுப்பீர்கள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலரின் தவறுகளைசுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**துலாம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**விருச்சிகம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**தனுசு**
உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. வேற்று மதத்தவர் அறிமுகமாவார்.

**மகரம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார்.பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புது வேலை அமையும்.

**கும்பம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். பூர்வீகசொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். சாதிக்கும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

# அனலைதீவு கடலில் நேற்று அதிகாலை 211 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச்.04

யாழ்ப்பாணம், அனலைதீவு கடற்பகுதியில் வைத்து நேற்று அதிகாலை 211 கிலோ 300 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கேரளக் கஞ்சாவை கடத்தி வந்தவர்களிடம், கடற்பகுதியில் வைத்து கைமாற்றி வாங்கி வரும்போது நேற்று அதிகாலை 04.00 மணியளவில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் - பேசாலை மற்றும் காரைநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் இவர்களை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதிகள் வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச்.04

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம்,

உயிர்ப்பை சித்தி ரிக்கும் திருப்பாடுகளின் நாடகத்துக்கான பிரதிகள் வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளாகிய நாளை 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை 04. 30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் "கலைஞான சுரபி" தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ப. யோ .ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவதுடன், ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்குவார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த ஆண்டு திருப்பாடுகளின் நாடகம் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையிலான நான்கு நாட்களுக்கு " வெள்ளியில் ஞாயிறு" என்னும் பெயரில் மாலை 06.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (எ)

# 'இயற்கையை பாதுகாப்போம்' கிளிநொச்சியில் விழிப்புணர்வு

கிளிநொச்சி, மார்ச்.04

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் பங்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் "இயற்கையைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகத்தினருடன் இணைந்து, கிளிநொச்சி மறைக்கோட்டக் குருமுதல்வரும், பரந்தன் பங்குத்தந்தையுமான அருட்பணி அ. பெ. பெனற் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் இந்த நிகழ்வு நடைபெற்றது.



இதில், கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பிரதித் திட்டமிடல்பணிப்பாளர் பூ. ராஜ்வி னோத் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து தேவாலய வளாகத்தினுள் பயன்தரு மரக்கன்றுகள் நாட்டப்பட்டதுடன், மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (எ)

# புதிய நிர்வாகம் தெரிவு

வவுனியா, மார்ச்.04

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டு வருட ஆட்சிக்காலத்தை கொண்ட புதிய நிறைவேற்று நிர்வாகக் குழுவின் தலைவராக க. ஹரிபிரசாத்தும் செயலாளராக த. யசோதரனும்

பொருளாளராக எஸ். காண்டீபனும் சிரேஷ்ட உபதலைவராக கு. கிஷோக்குமாரும் வெளிநாட்டு தொடர்புகளுக்கான உபதலைவராக ந. கபிலநாத்தும் பாடசாலை தொடர்பு மற்றும் கலை கலாசார உபதலைவராக செ. சந்திரகுமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

# 'தகரேறுபடலம்' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் - 15 சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு நடைபெறவுள்ளது. சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், "தகரேறுபடலம்" என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேலும் நிகழ்த்தவுள்ளனர். (எ)

# மணல் அகழ்வை தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.04

வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் தொடர்ந்து சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது

இந்த நிலையில், வடமராட்சி கிழக்கு ஆழியவளையில் மண் அகழ்வு அதிகமாக இடம்பெற்று வருகிறது. எனவே,

தமது கிராமத்தில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்து நிறுத்துமாறும் ஆழியவளை கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மருதங்கேணி பொலிஸாரிடம் கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்தனர். இதனையடுத்து கடந்த முதலாம் திகதி பிற்பகல் 03. 00 மணியளவில் அந்தக் கிராமத்துக்கு சென்ற பொலிஸார், கிராம அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களைப் பார்வையிட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட தேவையுடையோருக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கவேண்டும்!

## சத்தியலிங்கம் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, மார்ச் 04

**குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் விசேட தேவையுடையோருக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டுமென இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று நான்காவது நாளாக இடம்பெற்ற நிலையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சிறிய அளவில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு மானிய அடிப்படையில் மின்சாரம் விநியோகிக்கப்படவேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (அ)

## ஜீவன் தொண்டமானுக்கு பிணை

கொழும்பு, மார்ச் 04

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானுக்கு, நுவரெலியா மாவட்ட நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

கடந்த வருடம் மே மாதம் 30 ஆம் திகதி, களனிவெளி பெருந்தோட்ட யாக்கத்துக்கு உட்பட்ட பீட்ரூ தோட்ட தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்ததாக குற்றச்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு, எதிர்வரும் ஜூன் மாதம் ஒன்பதாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், குறித்த வழக்கின் சந்தேக நபர்களாக ஜீவன் தொண்டமான் உட்பட 10 சந்தேக நபர்களின் பெயர்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அவர்களை தலா 5 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

## சுற்றுலா கைத்தொழில் வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 04

நாட்டின் சுற்றுலாக் கைத்தொழிலின் வருமானம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தமது புதிய புள்ளி விபரத்தில் தெரிவித்துள்ளது.

**2025 ஜனவரி மாதத்தில் 400.7மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடிந்ததாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.**

இது 2024 ஜனவரி மாதத்தில் 341.8 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தைப் பெற்றதுடன் அது ஒப்பீட்டளவில் 17.2 வீத அதிகரிப்பாகும். (அ)

# தென்னக்கோன் உடன் சரணடைய வேண்டும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, மார்ச் 04

பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பொலிஸாரிடம் சரணடைய வேண்டும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார். அவருக்குப் பின்னால் பெருமளவான பொலிஸார் செல்வது உரிய நடவடிக்கை அல்ல.

ஆகவே, முன்னாள் பொலிஸ்மா அதிபர் விரைவில் பொலிஸாரிடம் சரணடைய வேண்டுமென அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

வெலிகம, பெலேன பகுதியில் உள்ள உணவகமொன்றுக்கு அருகில் 2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட எட்டு பேரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு மாத்தறை நீதவான் நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது.

இதன்படி, முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை குற்றப்புலனாய்வு திணைக்களம் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் கொழும்பில் உள்ள வீடு உட்பட நான்கு வீடுகள் அண்மையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அவர் குறித்த வீடுகள் எவற்றிலும் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், மாத்தறை நீதவான் நீதிமன்றம் அவர் வெளிநாடுகளுக்கு செல்வதை தடுக்கும் வகையிலான பயணத்தடையை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இறக்குமதியான வாகனங்களை விடுவிப்பதில் தாமதமான நிலை

கொழும்பு, மார்ச் 04

வாகன இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, அண்மையில் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த கப்பலிலுள்ள 197 வாகனங்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த வாகனங்களின் உற்பத்தி ஆண்டு தொடர்பாக எழுந்துள்ள பிரச்னைகள் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் கீர்த்தி குணரத்ன தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதிக்கான அனுமதிக்கமைய 2023, 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களை மாத்திரமே இறக்குமதி செய்ய முடியும்.

புதிய வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 2022 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது.

இந்த நிலையில், வருடம் தொடர்பில் எழுந்த பிரச்சினை காரணமாகவே 197 வாகனங்களை விடுவிக்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வேறு நோக்கங்களுக்காக சுற்றறிக்கைக்கு மாறாக எவரோ ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட விடயமாகவே இதனைக் கருதமுடிவதாக வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் கீர்த்தி குணரத்ன தெரிவித்துள்ளார்.

இதனிடையே, வாகனங்களை விடுவிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்படவில்லை என சுங்க ஊடகப் பேச்சாளரும் மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமுமான சீவலி அருக்கொட தெரிவித்தார். (அ)

## இலஞ்சம் வாங்கிய 2 பொலிஸார் கைது!

கொழும்பு, மார்ச் 04

ரூ.30,000 இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் ஒரு உப பொலிஸ் பரிசோதகர், ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டனர்.

கல்னேவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முறைப்பாட்டாளர் வாங்கிய நெல் வெட்டும் இயந்திரம் அவருக்குச் சொந்தமானது அல்ல என்று கூறி, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்ப்பதற்காக இலஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த விவகாரத்தை தீர்த்து, முறைப்பாட்டாளர் வாங்கிய பணத்தை திரும்பப் பெற உதவுவதற்கும், முறைப்பாட்டாளர் தனது இயந்திரத் தொழிலை எந்தப் பிரச்னையும் இல்லாமல் தொடர அனுமதிப்பதற்கும் பொலிஸார் இலஞ்சம் கேட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தப் முறைப்பாட்டைத் தொடர்ந்து, சனிக்கிழமை கல்னேவ பொலிஸ் நிலையம் அருகே இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணையாளர்கள் உப பொலிஸ் பரிசோதகரையும், பொலிஸ் கான்ஸ்டபிளையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் கெக்கிராவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். நீதிமன்றம் அவர்களை 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. (அ)

## நிர்வாணமாக மோ.சைக்கிளில் சென்ற இளைஞரை மடக்கிப் பிடித்த பொலிஸ்!

கொழும்பு, மார்ச் 04

கொழும்பில் இருந்து கண்டி நோக்கி நிர்வாணமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் கடுகன்னாவ பொலிஸாரால் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் 23 வயதுடைய அஹங்கம பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கண்டி-கொழும்பு வீதியில் உந்துருளியில் பயணித்த இந்த நபரை பொலிஸ் உத்தியோகத்தர்கள் கண்காணித்து பிடிக்க முற்பட்ட போதிலும் தப்பிச் சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடுகன்னாவ மற்றும் பேராதனை பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து வீதித் தடைகளைப் பயன்படுத்தி இந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## போலி ஆவணங்களைப் பயன்படுத்தி காணி விற்ற வயோதிப பெண் கைது!

கொழும்பு, மார்ச் 04

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி மற்றொரு நபருக்குச் சொந்தமான காணியை 50 மில்லியன் ரூபாவிற்கு விற்பனை செய்த 83 வயதுடைய வயோதிப பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு குற்றப் புலனாய்வுத் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

சந்தேகநபர் கொழும்பு 03, கொள்ளுப்பிட்டி வீதியில் உள்ள காணியை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் 2021 ஆம் ஆண்டு மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றத்தில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் பிரிவின் வணிக மோசடிப் பிரிவினர் அறிக்கையொன்றை சமர்பித்துள்ளனர்.

அதன் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போதே, சந்தேகநபர் பத்தரமுல்லையில் உள்ள ஒரு முதியோர் இல்லத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய பொலிஸ் சார்ஜன்ட் கைது!

கொழும்பு, மார்ச் 04

திஸ்ஸமஹாராம பகுதியில் வீடொன்றிற்கு முறைப்பாட்டை விசாரிக்க சென்ற வேளையில் 16 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திஸ்ஸமஹாராம பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுபவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவு மேற்கூறிய சிறுமி வீட்டில் குழப்பமான சூழல் ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸ் அவசர பிரிவு தொலைபேசிக்கு (119) கிடைத்த தகவலின் அடிப்படையில் இரவு நேர சேவையிலிருந்த சந்தேகநபர் குறித்த சிறுமியின் வீட்டுக்கு சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், குறித்த சிறுமி பயிற்சி வகுப்புக் குச் செல்வதாக கூறிவிட்டு தனது ஆண் நண்பருடன் கிரிந்த பகுதிக்கு சென்றதன் காரணமாக அச்சிறுமியின் வீட்டில் குழப்பமான சூழல் ஏற்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக விசாரிக்கச் சென்ற குறித்த சந்தேக நபர் சிறுமியின் அறைக்குச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டதாகக் கூறி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த பொலிஸ் சார்ஜன்ட் திஸ்ஸமஹாராம பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வரிசையை உருவாக்கியுள்ளது அரசு

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 04

**நாட்டில் எரிபொருள் விநியோகம் முடங்கியுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மீறியதால் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக எரிபொருளுக்காக வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளன. முறைமையில் மாற்றத்தை கொண்டு வர வந்த அரசாங்கம் இன்று எரிபொருளுக்கு வரிசையை ஏற்படுத்தியுள்ளது. இது தான் முறைமையில் மாற்றமா என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இந்த உடன்படிக்கைகள் தெரிந்தே மீறப்படும்போது இவ்வாறானதொரு நிலை உருவாகிறது. நாட்டை வினைத் திறனுடன் ஆள்வதற்கு அறிவும் தகுதியும் உள்ளவர்கள் இந்த அரசாங்கத்தில் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற விவசாயிகள் ஒன்றியத் துனருடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டதால், மக்களுக்கு சேவை வழங்குவோர் உட்பட சகலரும் எரிபொருள் பிரச்னையால் பாரிய பிரச்னைகளை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே அரசாங்கம் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, புதிய உடன்படிக்கைக்கு வரவேண்டும். தன்னிலையான சர்வாதிகார முடிவுகளை எடுக்கக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் அடிமைகளாக மாறியுள்ளது. மக்களின் உரிமைகள் மீறப்பட்டு வரிசைகளை உருவாக்கி மக்களை அவலப்படுத்தியுள்ள வேளையில் நாட்டை இவ்வாறு ஆள முடியாது.

புதிய மக்கள் ஆணையை உருவாக்கி வலு வான உள்ளூராட்சி சேவை முன்னெடுக்க வேண்டிய தேவை எமக்கு வந்துள்ளது என வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சென்றால் 2028 ஆம் ஆண்டு கடனை அடைக்க முடியாது. விரைவான பொருளாதார வளர்ச்சி காணப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். 2028 ஆம் ஆண்டில் வரி வருமானம் குறைவடைந்து கடனை செலுத்த முடியாத நிலை ஏற்படும் எனவும் எதிர்கட்சித் தலைவர் கூறினார். (அ)

# தமது இயலாமையை மறைக்க பிறரின் மீது பழி சுமத்தும் அரசு!

### குற்றம் சாட்டுகிறார் காஞ்சன விஜேசேகர

கொழும்பு, மார்ச் 04

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தீர்வை வரிச் சூத்திரத்தை அமுல்படுத்துவதை தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை உயர்நீதிமன்றம் 2024 ஓகஸ்ட் மாதம் இரத்துச் செய்தது. நீதிமன்றத்தின் தீர்மானத்தை செயற்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனைகளை கோரினோம்.

நீதிமன்றத்தின் தீர்மானத்தைச் செயற்படுத்த உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தோம் என முன்னாள் மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தின் தீர்மானத்தை கடந்த அரசாங்கம் செயற்படுத்தவில்லை என்று தமது இயலாமையை மறைத்துக் கொள்ள பிறர்மீது பழிசுமத்துவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் அவர் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எரிபொருள் விநியோகஸ்த்தர்களுக்கும், பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் இடையிலான முரண்பாடு தொடர்பில் அரசாங்கத்தின் தரப்பினர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதாகும்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தீர்வை வரி சூத்திரத்தை அப்போதைய அரசாங்கம் செயற்படுத்துவதை தடுக்கும் வகையில் எரிபொருள் விநியோகஸ்தர் சங்கம் 2022 ஆம் ஆண்டு உயர்நீதிமன்றத்திலும், 2023 ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் உத்தரவை பெற்றுக்கொண்டது.

எவ்வாறாயினும் 2024 ஆண்டு ஓகஸ்ட் 30 ஆம் திகதி உயர்நீதிமன்றம் அந்த உத்தரவுகளை இரத்துச் செய்யும் வகையில் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், ஆட்சிமாற்றம் ஏற்படும் வகையில் நீதிமன்றத்தின் உத்தரவை செயற்படுத்துவதற்கு உரிய ஆலோசனைகளை வழங்குமாறு வலுசக்தி மற்றும் சக்தி வலு அமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எழுத்துமூலமாக அறிவுறுத்தியிருந்தது.- என்றார். (அ)

# பாராளுமன்றத்தில் பொய்யான அறிக்கை

### அரசை சாடுகிறார் நாமல்

கொழும்பு, மார்ச் 04

பாராளுமன்ற சிறப்புரிமைகளை துஷ்பிரயோகம் செய்து பாராளுமன்றத்தில் பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால், அதைத் தடுக்க தனிநபர் பிரேரணையைக் கொண்டு வருவேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பிறகு ஊடகங்களுக்குப் பேசிய அவர், தவறான அறிக்கைகளை வெளியிட விரும்பாத அனைவரும் இந்த பிரேரணைக்கு வாக்களிப்பார்கள் என்றார். (அ)

# ரயிலில் மோதுண்டு மாணவன் பலி!

கொழும்பு, மார்ச் 04

அனுராதபுரத்திலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த ரயிலில் மோதுண்டு பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பலாங்கொடை கரித்தகந்த வாயிலுக்கும் கந்தேகொட ரயில் நிலையத்திற்கும் இடையில் 52.5 தூணுக்கு அருகில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர் எல்பிட்டிய, எல்ல வீதியில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஆவார்.

குறித்த மாணவன் தனது கையடக்க தொலைபேசியின் ஹெட்போன் பயன்படுத்திக் கொண்டு ரயில் தண்டவாளத்தில் தனியாகப் பயணித்ததாகவும் ரயிலில் ஒலி எழுப்பியும் சத்தம் கேட்கவில்லை என்றும், பின்னால் வந்த ரயிலில் மோதி இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவன் சாதாரண தர பரீட்சைக்கு இம்முறை தோற்றவிருந்தவர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# எரிபொருள் விநியோகத்தை குலைக்கும் குழு தொடர்பில் சி.ஐ.டியினர் விசாரணை!

கொழும்பு, மார்ச் 04

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விநியோக செயல்முறைக்கு இடையூறு விளைவிப்பதற்காக எரிபொருள் விநியோகஸ்தர்கள் எனக் கூறிக்கொள்ளும் குழுவொன்று தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எரிபொருள் விநியோகத்தில் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3 வீத கமிஷனை இரத்து செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுத்த முடிவு தொடர்பாக எழுந்துள்ள பிரச்னை காரணமாக, எரிபொருள் விநியோகஸ்தர்கள் என்று கூறிக்கொள்ளும் குழு தொடர்பில் முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில் இந்த குழு செயல்படுவதாக முறைப்பாட்டு மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதேநேரம், எரிபொருள் விநியோகத்தை பயன்படுத்தி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# 232,341 சுற்றுலாப் பயணிகள் இவ்வாரம் நாட்டுக்கு வருகை!

கொழும்பு, மார்ச் 04

2025 பெப்ரவரியில் 232,000க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தகவலின் படி 2025 பெப்ரவரி 01 முதல் 27 வரை மொத்தம் 232,341 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகபட்சமாக 34,006 பேர் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர், அதைத் தொடர்ந்து 29,241 பேர் ரஷ்யாவிலிருந்தும், 24,830 பேர் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும் வந்துள்ளனர்.

இந்த காலகட்டத்தில் ஜேர்மனி, பிரான்ஸ், சீனா, ஆஸ்திரேலியா, போலந்து, அமெரிக்கா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை பதிவாகியுள்ளது. எனினும், 2025 பெப்ரவரி யில் பதிவு செய்யப்பட்ட சுற்று லாப் பயணிகளின் வருகை 2025 ஜனவரியில் பதிவு செய்யப்பட்ட வருகையை (252,761) விட சற்று குறைவாகவே உள்ளது.

# மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் விபத்து! 12 பேர் காயம்!!

கொழும்பு, மார்ச் 04

குருவிட்ட, எரத்ன லசகந்த வளைவு பகுதியில் நேற்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று விபத்துக்குள்ளானதில் சுமார் 12 பேர் காயமடைந்துள்ளதாக குருவிட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி நேற்று காலை 6 மணியளவில் இந்த விபத்து நிகழ்ந்தது. காயமடைந்தவர்களை மக்கள் எரத்ன பிராந்திய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மேலும் அவர்களில் இருவர் இரத்தினபுரி பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ)

# இங்குள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்ற முயற்சி!

கொழும்பு, மார்ச் 04

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாற்ற அரசாங்கம் முயற்சிப்பதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

இதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அதன் உப தலைவர் குசும் சந்தநாயக்க தெரிவித்தார்.

லங்கா ஐஓசி எரிபொருளின் விநியோகஸ்தர்கள் எரிபொருள் கட்டளைகளை வழங்குவதை நிறுத்த முடிவு செய்துள்ளனர்.

அதன் தலைவர் கோசல விதான ஆராச்சி கூறுகையில்-

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செல்வாக்கு காரணமாக ஒரு கட்டளைக்கு 35,000 ரூபாய் நட்டம் ஏற்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாள குழுக்களின் ஆரம்பம் மக்கள் விடுதலை முன்னணியே!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 04

**பாதாள குழுக்களின் செயல்பாட்டுக்கான ஆரம்பத்தை மக்கள் விடுதலை முன்னணியே ஆரம்பித்து வைத்தது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**



கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எரிபொருள் கையிருப்பில் எவ்வித நெருக்கடியும் தற்போது ஏற்படவில்லை.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டால் எரிபொருள் விநியோகத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு நூற்றுக்கு 3 ரூபாய் என்ற அடிப்படையில் மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு காலத்திலும் இந்த பிரச்சினை காணப்பட்டது.

எரிபொருளின் விலை உயர்வடையும்போது வழங்கப்பட்ட மேலதிக கட்டணம் அதிகரிக்கப்படும்.

இது ஒரு முறையற்ற செயல்பாடாகவே காணப்பட்டது.

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர இதற்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

தற்போது இந்த அரசாங்கம் 3 ரூபாய் மேலதிக தொகையை வழங்குவதை இடைநிறுத்துவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எரிபொருள் விநியோகஸ்தர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளார்கள்.

அரசாங்கம் இவ்விடயத்தில் தான்தோன்றித்தனமாக செயல்படாமல்,

எரிபொருள் விநியோகஸ்தர்களுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்.

அரசாங்கம் ஒரு சில விடயங்களில் தன்னிச்சையாக செயல்படுவது பல பிரச்னைகளுக்கு பிரதான காரணியாக அமைகிறது.

பாதாளக் குழுக்களின் செயல்பாடுகளுக்கு அரசாங்கம் கடந்தகால அரசாங்கங்களை குற்றஞ்சாட்டுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

பாதாள குழுக்களின் செயல்பாட்டுக்கான ஆரம்பத்தை மக்கள் விடுதலை முன்னணியே ஆரம்பித்து வைத்தது.

விடுதலை புலிகள் அமைப்பின் ஆயுதங்களில் பெரும்பாலானவற்றை பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியது.

மிகுதி ஆயுதங்கள் அழிக்கப்பட்டன.

மக்கள் விடுதலை முன்னணி 1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரச படைகளில் இருந்து கைப்பற் றிய பெரும்பாலான ஆயுதங்கள் முழுமையாக பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைக்கப்ப டவில்லை.

சட்டவிரோத ஆயுதங்களை செயலிழக்க செய்ய வேண்டுமாயின் அதற்கான ஆரம்ப பணியை மக்கள் விடுதலை முன்னணியின் பத்தரமுல்லை பணிமனையில் இருந்து மேற் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் சிந்திக்கவேண்டும்

## விமல் வீரவன்ஸ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 04

அரசாங்கத்துக்கு சார்பற்ற இராணுவம் நாட்டில் இருப்பதாக வெளிக்காட்டுவதற்காகவே படையினரின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-படையினரின் எண்ணிக்கையை குறைக்கவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். இராணுவம் தொழில்முறையானதாக இயங்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொழில்முறையானதாக இல்லாததால் போர்க்குற்றம் செய்திருக்கலாம் என்ற நிலைப்பாடு இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது ஜெனிவாவையும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் திருப்திப்படுத்துவதற்காகவே ஜனாதிபதி இவ்வாறான தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறார்.

படையினர் அரசாங்கத்துக்கு சார்பற்றவர்கள் என அவர் வெளிக்கொண்டுவர முயற்சிக்கிறார். அது மிகவும் தவறானது. அரசாங்கத்தை படையினரே காப்பாற்றுகின்றனர். ஆதலால் அவ்வாறான கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

இராணுவத்துக்கு வழங்கப்பட்டு வந்த இறைச்சிக் கறி நிறுத்தப்பட்டுள்ளது. வெறும் மரக்கறி உணவுகளே வழங்கப்படுகின்றன.

இராணுவத்தை இந்த அரசாங்கம் பொருட்படுத்துவதில்லை. தேசிய பாது காப்பு குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டும்-என்றார். (அ)

# இரு சகோதரர்கள் கொலை மூன்று சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, மார்ச் 04

பத்தேகம பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி குறித்த பகுதியில் நடந்த இறுதிச் சடங்கொன்றின்போது இரு குழுக்களிடையே மோதல் ஏற்பட்டது.

இதன்போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் கொல்லப்பட்டனர். அத்துடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மின்சார கட்டணத்தில் ஜூன் மாதம் திருத்தம்

கொழும்பு, மார்ச் 04

நாட்டில் நிலவும் வறட்சி காலநிலை, எரிபொருள் அடிப்படையிலான மின்சார உற்பத்தியின் அளவை பொறுத்து ஜூன் மாதம் மின்சார கட்டணத்தில் திருத்தம் செய்யப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின்பேரில், நாட்டின் தற்போதைய விதிமுறைகளின்படி, மின்சாரக் கட்டண மாற்றங்கள் ஒவ்வொரு ஆறு மாதத்துக்கு ஒருமுறை மேற்கொள்ளப்பட வேண்டும் என மின்சார சபையின் பேச்சாளர் பொறியியலாளர் தம்மிக விமலரத்ன தெரிவித்தார்.

தற்போதைய வறட்சி காரணமாக நிலைமை கடினமாக இருப்பதாகவும் மே மாதத்தில் மழை பெய்யுமாயின் செலவுகள் குறையலாம்.

தற்போது எரிபொருள் மூலமானமின்சார உற்பத்தியின் அளவு வெகுவாக அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறியிருந்தார்.

இதேவேளை, எரிசக்தி அமைச்சின் செயலாளர், வருங்கால மின்சார கட்டண மாற்றங்கள் பற்றிய எந்த உத்தியோகபூர்வ முடிவும் எடுக்கப்படவில்லை. இது வானிலை நிலைமைகளை பொறுத்தே அமையும் என குறிப்பிட்டார்.

## பதுளை, நுவரெலியாவில் மண் சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 04

நிலவும் மோசமான வானிலை காரணமாக பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் உள்ள ஹாலிஎல, பசறை, கந்தகெட்டிய, பதுளை, ஹப்புத்தளை, மீகஹகிவுல, ஊவா பரணகம மற்றும் சொர்ணா தொட்ட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலகப் பகுதிக்கு நிலை 01 இன் கீழ் மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பையும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ளது.(அ)

# இந்தியாவை கடந்து இலங்கைக்கு வெளிநாடுகளின் முதலீடுகள் வராது!

## மனோ கணேசன் எம்.பி. கருத்து

கொழும்பு, மார்ச் 04

இந்தியாவைக் கடந்து இலங்கைக்கு வெளிநாட்டு முதலீடு வராது எனவும், அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்தின் வெளியேற்றம் சர்வதேச முதலீட்டாளருக்கு இலங்கை குறித்த எதிர்மறை செய்தியைக் கொண்டு சென்று விட்டது எனவும் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதானி கிரீன் எனர்ஜி-ஸ்ரீலங்கா மீள் சக்தி பெருந்திட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த போதே மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அதானி கிரீன் எனர்ஜி-ஸ்ரீலங்கா மீள் சக்தி பெருந்திட்டம், இலங்கைக்கு மட்டும் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமல்ல. அது மேலதிக மின்சக்தியை இந்திய மின் சுற்றுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்தை கொண்ட திட்டமாகும். அதற்காக இலங்கை-இந்திய மின் சுற்றுகள் இணைக்கப்பட இருந்தன.

அத்துடன் இப் பெருந் திட்ட மின் உற்பத்தி கட்டமைப்பு மற்றும் இந்திய சுற்றுடனான தொடர்பு இணைப்பு ஆகியவற்றை அமைக்கும் மற்றும் பராமரிக்கும், பாரிய பொறுப்புகளை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் ஏற்று இருந்தது.

அதை புரிந்துகொள்ள இன்றைய இலங்கை அரசு தவறி விட்டது.

அதுமட்டுமல்லாது அதானியை இலங்கை அரசு வெளியேற்றவில்லை. அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் இலங்கையை விட்டு வெளியேறி விட்டது. இச்சம்பவம் இன்று இலங்கை நோக்கி வரக்கூடிய சர்வதேச முதலீட்டாளருக்கு எதிர்மறை செய்தியை கொண்டு சென்றும் விட்டது.

மேலும் இலங்கை-இந்திய மின் சுற்று மூலம், இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் இலங்கை மின்சாரம் இலங்கைக்கு கொண்டு வரும் வருமானம் மூலம் இலங்கையில் மின்சார கட்டணங்களை குறைக்க முடியும். எதிர்காலத்தின் மீது கண் வைத்து தீர்மானம் எடுக்க இலங்கை அரசு தவறிவிட்டது. அதானியின் யுனிட் விலை தொடர்பில் பிரச்னை இருக்கும் போது, அதை பேசி தீர்த்து இருக்கலாம்.

அது மட்டுமல்லாது இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இந்திய பங்காளர்களுடன்தான் வருவார்கள்.

மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கையை நோக்கி முதலீட்டாளர்கள், இந்தியா விட்டு இங்கு வருவார்கள் என ஆட்சியாளர்கள் நினைக்கின்றார்களா?-என்றார். (அ)

# யானை மோதுவதை தவிர்க்க ரயில் நேரம் அதிரடி மாற்றம்!

கொழும்பு, மார்ச் 04

இரவு நேரங்களில் ஓடும் ரயில்களில் காட்டு யானைகள் மோதுவதை தடுக்க ரயில்வே துறை நீண்ட கால மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

முதல் கட்டமாக, காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் ரயில் வேகத்தை குறைக்க, அந்த பகுதிகளுக்கு குறைந்த வேக வரம்பை வழங்குவதன் மூலம் ரயில்வே துறை ரயில் அட்டவணையை திருத்தியுள்ளது.

காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள காலங்களில் ரயில் வேகத்தை குறைக்க,

சம்பந்தப் பட்ட பகுதிகளில் காட்டு யானைகள் நடமாட்டம் உள்ள காலங்களுக்கு முன்னும் பின்னும் ரயில்களை இயக்க, ரயில்வே துறை ரயில் தொடக்க நேரங்களையும் திருத்தியுள்ளது.

அதன்படி,

மட்டக்களப்பு பாதையில் பளுகஸ்வெவ முதல் ஹிங்குராக்கொட வரையிலும், வெலிகந்த முதல் புனானி வரையிலும், திருகோணமலை பாதையில் கல்ஓயா சந்தி முதல் கந்தளாய் வரையிலும் உள்ள பகுதிகளைப் பாதிக்கும் வகையில் ரயில் நேர அட்டவணைகள் திருத்தப்பட்டு 07 ஆம் திகதி முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், அந்த திகதியிலிருந்து கொழும்பு கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இயங்கும் "மீனகாயா" இரவு நேர அஞ்சல் ரயிலுக்கு எஸ்-13 வகை பவர் ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத செயல்பாடுகள் சம்மாந்துறையில் அதிகரிப்பு

## விழிப்புடன் இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தல்

சம்மாந்துறை, மார்ச்.04

**அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அண்மைக்காலமாக வீடுகள் உடைக்கப்பட்டு கொள்ளைகள் உள்ளிட்ட சட்டவிரோத செயல்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.**

ரமழான் நோன்பு காலத்திலும் இரவு வேளையில் இறை வணக்க வழிபாட்டுக்கு ஆண்கள் - பெண்கள் பள்ளிவாசலுக்கு செல்ல வேண்டியுள்ளதனால் அதனைப் பயன்படுத்தி வீடுகளை உடைத்து திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே, பொதுமக்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களை மிக சாதுரியமாக கையாண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தி செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த மாதம் 27 ஆம் திகதி சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல மகளிர் பாடசாலைக்கு அருகிலுள்ள வீடு உடைக்கப்பட்டு 13 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டிருந்ததுடன் முறைப்பாடுக்கு அமைய இம்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை மலையடிக்கிராமம் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். குறித்த நபரிடமிருந்து திருடப்பட்ட பணத்தின் ஒரு தொகை உட்பட வீடு உடைப்பதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டிருந்தன.

இருப்பினும் இவ்வாறான வீடு உடைப்பு மற்றும் சட்டவிரோத செயல்பாடுகள் பொது மக்களின் கவனவீனத்தால் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் சுட்டிக்காட்டினர். அத்துடன், கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே. டி. எஸ். ஜெயலத்தின் வழிகாட்டுதலில் வீதி ரோந்து நடவடிக்கைகள் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கைகள் என்பன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் சிலர் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

எனவே, இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர். (எ- 01)

# கிழக்கு தமிழ் ஊடக இல்லம் மட்டக்களப்பில் ஆரம்பம்



மட்டக்களப்பு, மார்ச்.04

கிழக்கு மாகாணத்தில் அச்சு, இலத்திரனியல், இணையத்தளம், பதிவு செய்யப்பட்ட ஊடகங்களில் பணிபுரியும் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு தனித்துவத்துடன் செயல்படக்கூடிய அமைப்பை உருவாக்குவதற்கான முதல் முயற்சியாக விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பிலுள்ள ஊடகக் கற்கைகள் ஆய்வு நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது, கிழக்கு தமிழ் ஊடக இல்லம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, தமிழ் ஊடகவியலாளர்களுக்கான புதிய ஒன்றியத்தின் நிர்வாகத் தெரிவுகளும் நடைபெற்றன.

இதற்கமைய ஒன்றியத்தின் தலைவராக ஊடகவியலாளர் கனகராசா சரவணனும், ஒன்றியத்தின் செயலாளராக ஊடகவியலாளர் உ. உதயகாந்தும், பொருளாளராக ஊடகவியலாளர் ஜே. ருக்சிக்காவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

# மனைவியைத் தாக்கிய கணவன் தலைமறைவு

கல்முனை, மார்ச்.04

மனைவியைத் தாக்கிய கணவனை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பள்ளி வாசல் அருகில் உள்ள கடற்கரைப்பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதுடன் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மனைவி, கணவனுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கமைய பெண்கள், சிறுவர் முறைப்பாட்டுப் பிரிவு பொலிஸ் குழுவினர் தலைமறைவாகியுள்ள குடும்பஸ்தரை கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும், குறித்த சம்பவத்தில் 38 வயதுடைய நிந்தவூர் பகுதியைச் சேர்ந்த பெண்ணே பாதிக்கப்பட்டுள்ளார். (எ-01)

# அரசியல்வாதி சிபாரிசில் பதவி வேண்டாம்!

## இராஜினாமா செய்த உறுப்பினர்

சாய்ந்தமருது, மார்ச்.04

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் இடைக்கால நிர்வாக மரைக்காயர் சபைக்கு பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவாவின் சிபாரிசின் பெயரில் வழங்கப்பட்ட மரைக்காயர் பதவியை இராஜினாமா செய்வதாக ஓய்வு பெற்ற கூட்டுறவு பொது முகாமையாளர் வை. அஹமட் லெவ்வை தெரிவித்துள்ளார்.

தனது இராஜினாமா குறித்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கும் பிரதிகள் அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஆதம்பாவாவின் சிபாரிசின் மூலம் இடைக்கால நிர்வாக சபை 42 பேர் கொண்ட குழுவாக தெரிவு செய்யப்பட்டது.

அதில், ஒரு வராகத் தெரிவு செய்யப்பட்ட அஹமட் லெவ்வையே இராஜி னாமா செய்வதாக அறிவித்துள்ளார். (எ- 06)



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "தொடர் நினைவுப் பேருரை - 2025" நிகழ்வில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ். ஏ. ஐ. மத்தியூ நினைவுப் பேருரை நேற்று முன்தினம் கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பற்றிமா தேசிய கல்லூரியின் அதிபர் எஸ். ஈ. ஹெஜினோல்ட் கலந்து சிறப்பித்தார்.

# ஒஸ்கார் அமைப்பின் பொதுக்கூட்டம்

காரைதீவு, மார்ச்.04

அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின்(ஒஸ்கார்) 15ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை சிட்னியில் நடைபெற்றது.

இதில், 2025 கால கட்டத்தில் ஒஸ்கார் செயல்பாடுகளை நிர்வகிப்பதற்கு ஒரு புதிய செயல் குழு தெரிவு செய்யப்பட்டது.

இதன்படி தலைவராக பத்மநாதன் கந்தசாமி தெரிவு செய்யப்பட்டார். (எ)

# நோன்பு கஞ்சி உணவு பண்டங்கள் உற்பத்திக்கு சுகாதார நடைமுறை

கல்முனை, மார்ச்.04

புனித ரமழான் காலத்தில் விசேடமாக உற்பத்தி செய்யப்படும் நோன்புக் கஞ்சி உணவுப் பண்டங்கள் என்பனவற்றின் சுகாதார நிலைமைகளை பேணுவது தொடர்பான கலந்துரையாடல் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடந்த முதலாம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் சாய்ந்தமருது மாவட்ட மருத்துவமனைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் சம்மேளனத் தலைவருமான சனூஸ் காரியப்பர், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்துக்குட்பட்ட உணவு கையாளும் நிறுவனத் தலைவர்களும் பங்கேற்றனர்.


இந்தக் கலந்துரையாடலில் ரமழான் காலத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பண்டங்கள், கஞ்சி விநியோகம் போன்ற விடயங்களில் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பல்வேறு விடயங்களை கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த பொதுச் சுகாதார பரிசோதகர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

இதில், பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்தல், பிளாஸ்ரிக் வாளிகளில் கஞ்சி வழங்குவதை முற்றாக நிறுத்துதல், தனிநபர் சுகாதாரம் பேணி தொப்பி அணிதல், கஞ்சி தயாரிக்கும் இடங்களை சுத்தமாக பேணுதல், சுத்தமான உணவுப்பொருட்களைக் கொண்டு ஆரோக்கியமான நபர்கள் மூலம் கஞ்சி தயாரித் தல், உணவைக் கையாள்பவர்க ளுக்கான மருத்துவ சான்றிதழ் களைப் பெற்றுக்கொள்ளல், பொதுச் சுகாதார பரிசோதகர் கள் மூலமாக கஞ்சி விநியோ கத்தை பரிசீலனை செய்தல், சிற்றுண்டி உணவகங்கள், கண்ணாடிப் பெட்டியில் உணவை காட்சிப்படுத்தல், சிற்றுண்டி தயாரிப்பை செய்பவர்கள் மருத்துவச் சான்றிதழ் பெறல், கையுறை, தொப்பி போன்றவை கட்டாயமாக அணிதல், வாடிக்கையாளர் உணவைத் தெரிவதை தடுத் தல், ரமழான் காலத்தில் மட் டும் சிற்றுண்டி தயாரித்து விற்பனை செய்பவர்கள் தங்களை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரைன் போர் குறித்து ஐரோப்பிய நாடுகள் ஆலோசனை

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் பங்கேற்பு "இங்கிலாந்தும் பிரான்ஸூம் துணை நிற்கும்"



லண்டன், மார்ச்.04

**ரஷ்யா - உக்ரைன் இடையே நீடிக்கும் போர் குறித்து ஐரோப்பிய நாடுகள் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தியுள்ளன. இதில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் பங்கேற்றுள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் இடையே நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா ஒரு சமரச திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது தொடர்பில் பேச்சுக்களை நடத்த உக்ரைன் ஜனாதிபதிக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்தது.

இதையடுத்து வாஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் செய்தியாளர்கள் முன்னிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, இரு நாட்டுத் தலைவர்களும் நேருக்கு நேர் கடுமையான வார்த்தைகளால் மோதிக் கொண்டனர்.

இதனால், பேச்சுவார்த்தையிலிருந்து பாதியில் ஜெலன்ஸ்கி வெளியேறினார். இதையடுத்து வெள்ளை மாளிகையில் இருந்து உடனடியாக வெளியேறும்படி ஜெலன்ஸ்கி மற்றும் அவரது குழுவினருக்கு வெள்ளை மாளிகை அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் ஜெலன்ஸ்கி இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்குச் சென்றார். அங்கு பிரதமர் கெய்ரை, ஜெலன்ஸ்கி சந்தித்தார்.

அப்போது, இங்கிலாந்து உங்களுக்கு முழு ஆதரவு வழங்கும். நாங்கள் உக்ரைனுடன், எவ்வளவு காலம் வேண்டுமானாலும் துணை நிற்போம் என்று கெய்ர் கூறினார். இதன் பிறகு அவர் செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில், "ரஷ்யா - உக்ரைன் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த புதிய திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். இதில், உக்ரைனுடன் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகள் இணைந்து பணியாற்றும்.

உக்ரைனில் அமைதி திரும்ப அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விரும்புகிறார் என்று நாங்கள் நம்புகிறோம். அதேநேரம் அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதம் மிகவும் முக்கியம்"- என்றார்.

பின்னர் நடந்த முக்கிய பேச்சுக்களின் தொடர்ச்சியாக உக்ரைனுக்கு இலங்கை பெறுமதியில் சுமார் 53 ஆயிரம் கோடி ரூபாய் கடன் உதவி வழங்குவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இதனிடையே ரஷ்யா - உக்ரைன் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அடுத்த கட்ட நடவடிக்கையை எப்படி முன்னெடுத்து செல்வது என்பது தொடர்பில் லண்டனில் ஐரோப்பிய நாடுகளின் அவசர ஆலோசனைக் கூட்டத்துக்கு இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் ஏற்பாடு செய்திருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், இத்தாலி பிரதமர் மெலோனி மற்றும் ஜேர்மனி, டென்மார்க், நெதர்லாந்து, நோர்வே, போலந்து, ஸ்பெயின், கனடா, பின்லாந்து, சுவீடன், ருமேனியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொண்டனர். இதில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய இங்கிலாந்து பிரதமர் கெய்ர், "உக்ரைனுக்கு நல்ல பலனை பெற்றுத்தருவது நமது கடமையாகும்.

அது இங்குள்ள ஒவ்வொரு நாட்டின் பாதுகாப் புக்கும் இன்றியமையாதது. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உக்ரைனுடன் இங் கிலாந்தும், பிரான்ஸூம் இணைந்து பணியாற்றும்"- என்றார்.(எ)

# காஸாவில் போர் நிறுத்தத்தை தற்காலிகமாக நீடிக்க ஒப்புதல்

ஜெருசலேம், மார்ச். 04

காஸாவில் போர் நிறுத்தத்தை தற்காலிகமாக நீடிக்க இஸ்ரேல் ஒப்புதலளித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியால், இஸ்ரேலுக்கும் காஸாவுக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி முதல் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் அரசும், அந்த நாட்டுப் பணயக் கைதிகளை ஹமாஸ் தரப்பும் விடுவித்து வருகின்றன. இந்தப் போர் நிறுத்தம் ஒப்பந்தம் விரைவில் முடிவடையவுள்ளது.

இந்த நிலையில், ரமழான் பண்டிகை காலத்தில் காஸாவில் தற்காலிக போர் நிறுத்தம் செய்வதற்கான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தூதுவர் ஸ்டீவ் விட்காப் முன் மொழிவுக்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது. ஏற்கனவே, போர் நிறுத்தத்தின் முதல் கட்டம் முடிவு பெறும் தருவாயில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மத விடுமுறை நாட்களில் பதற்றங்களைத் தணிப்பதே தற்காலிக போர் நிறுத்தத்தின் நோக்கமாகும். ரமழான் தொடங்கும்போது, உலகெங்கிலும் உள்ள பலர் பிரார்த்தனை மற்றும் உண்ணாவிரதத்துடன் மாதத்தை வரவேற்கிறார்கள். இதனால் தற்காலிக போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறினார். (எ)

# 2 வாரங்களில் 5ஆவது முறையாக ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்!

காபுல், மார்ச்.04

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் பிற்பகல் 02.31 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 4. 2 ஆக பதிவானது. இது தொடர்பில் தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் வெளியிட்ட அறிக்கையில், இந்த நிலநடுக்கம் 140 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி ஆப்கானிஸ்தானில் 4. 6 என்ற ரிக்டர் அளவுகோலில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது. இந்த நிலநடுக்கம் 120 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி அங்கு ரிக்டர் அளவுகோலில் 4.2 என்ற அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் 150 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

இதேபோன்று, பெப்ரவரி 18ஆம் திகதி ரிக்டர் அளவுகோலில் 4. 6 மற்றும் 4.3 என்ற அளவிலான இரு நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இது முறையே 10 கிலோ மீற்றர் மற்றும் 180 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலையில், நேற்று முன்தினம் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்துடன் சேர்த்து கடந்த 2 வாரங்களில் 5ஆவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.(எ)

# 2ஆம் கட்ட பேச்சுகள் எப்போது?

காஸா, மார்ச்.04

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே இடம்பெற்று வந்த போர், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் வற்புறுத்தலால், தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து, கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி போர் நிறுத்த அறிவிப்பை இரு தரப்பும் வெளியிட்டன. ஒப்பந்தப்படி இஸ்ரேல் - ஹமாஸ் இடையே பணயக் கைதிகள் பறிமாற்றம் நடைபெற்றது. ஆனால், இன்னும் பல பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டியுள்ளது.

இந்தச் சூழலில் இரு தரப்பினரும் இன்னும் இரண்டாம் கட்ட பேச்சுக்களை நடத்தவில்லை. ஆனால், "அடுத்த கட்ட பேச்சு வார்த்தைக்கு இஸ்ரேல் தயாராக இருக்கிறது, காஸா மீதான போரை நீடிக்க விரும்பவில்லை"என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஏற்கனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் கடந்த சனிக்கிழமையுடன் முடிவடைந்த நிலையில் காஸாவுக்குள் உணவு, மருந்து உள்ளிட்ட இதர பொருட்கள் நுழைவதை இஸ்ரேல் நிறுத்தி விட்டதாக அறிவித்துள்ளது.

போர் நிறுத்தத்தை நீடிக்க அழுத்தம் தரும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், "அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துடன் ஆலோசித்த பின்பே இந்த முடிவு எடுக்கப்பட்டது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக ஹமாஸ் அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. (எ)

# அமெரிக்காவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக அறிவிப்பு

வாஷிங்டன், மார்ச்.04

ஆங்கிலத்தை அமெரிக்காவின் அதிகாரபூர்வ ஆட்சி மொழியாக நிர்ணயித்து அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அரசாணையில் கையெழுத்திட்டார்.

ஆங்கிலத்தை முதல் மொழியாகப் பேசுவோரில் மூன்றில் 2 பங்கினர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், அமெரிக்காவின் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தை மாற்றும் நிர்வாக உத்தரவில் ட்ரம்ப் நேற்று கையெழுத்திட்டுள்ளார். (எ)

# பஸ் விபத்து 37 பேர் பலி!

சுக்ரி, மார்ச்.04

பொலிவியாவில் மது போதையில் இருந்த சாரதி செலுத்திய சுற்றுலா பஸ் விபத்தில் சிக்கியதில் 37 பேர் பலியாகினர்.

அந்த நாட்டில் ஆருரோ பகுதியில் பெரிய திருவிழா கொண்டாட்டம் ஒன்று நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் சிலர் பஸ்களில் புறப்பட்டனர். அப்போது, ஒரு பஸ் பொடோசி என்ற பகுதியில் வந்தபோது திடீரென விபத்தில் சிக்கியது.

இந்த சுற்றுலா பஸ், எதிர்த் திசையில் உள்ள வீதிக்குச் சென்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.இந்த கொடிய விபத்தில் சிக்கி 37 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 39 பேர் உயுனி நகரின் 4 மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த பஸ் விபத்தில் சிக்குவதற்கு முன்பு அதன் சாரதி மது பானம் அருந்தினார் என்று உயிர்தப்பிய பயணிகள் கூறினர்.

# ஜப்பானில் காட்டுத்தீ!

ரோக்கியோ, மார்ச்.04

ஜப்பானில் ஏற்பட்ட காட்டுத்தீயில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார்.

ஜப்பானின் வடக்கே ஒபுனேட்டோ நகரில் நேற்று முன்தினம் திடீரென காட்டுத்தீ ஏற்பட்டது. இதனால், அச்சமடைந்த குடியிருப்புவாசிகள் தங்களுடைய வீடுகளை விட்டு வெளியேறி, உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்தனர்.

இதுவரை 2 ஆயிரம் பேர் வேறிடத்துக்கு சென்றனர். 1,200 பேர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். காட்டுத்தீயில் சிக்கி ஒருவர் பலியானார். 30 ஆண்டுகளில் இல்லாத வகையில் மிகப் பெரியளவில் இந்த காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. (எ)

# காஸாவுக்கான உதவிகளை நிறுத்தியது இஸ்ரேல் அரசு

டெல் அவிவ், மார்ச்.04

காஸாவுக்கு உதவி செய்வதைத் தடுக்க இஸ்ரேல் அரசு முடிவு செய்துள்ளது. இதன் படி, "காஸாவுக்குள் பொருட்கள் மற்றும் அனைத்து நுழை வையும் தடுக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று இஸ் ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். நேற்று முன்தினம் ஞாயிற் றுக்கிழமை தனது அமைச்சரவையை சந்திப்பதற்கு முன்பு அவர் இவ்வாறு கூறினார். மேலும், "ஹமாஸ் தொடர்ந்து தனது நிலைப்பாட்டில் உறுதி யாக நின்று, எங்கள் பணயக் கைதிகளை விடுவிக்கா விட் டால், மேலும் விளைவுகள் ஏற் படும்" என்றும் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வருண் அபார பந்து வீச்சு இந்தியா அசத்தல் வெற்றி

## 205 ஓட்டங்களுக்கு சுருண்ட நியூசிலாந்து

டுபாய், மார்ச்.04

வருண் சக்கரவர்த்தியின் அபார பந்துவீச்சால் நியூசிலாந்து அணியை வீழ்த்திய இந்தியா, இன்று அரையிறுதியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் நியூசிலாந்து - இந்தியா, தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா அணிகள் ஏற்கனவே அரையிறுதிக்கு தகுதி பெற்று விட்டன. இந்த நிலையில், டுபாயில் உள்ள சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 12ஆவது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 249 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஸ்ரேயஸ் ஐயர் 79 ஓட்டங்கள் அடித்தார். நியூசிலாந்து தரப்பில் மேட் ஹென்றி 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 250 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களம் கண்டது.

நியூசிலாந்தின் தொடக்க வீரர்களாக ரச்சின் ரவீந்திரா மற்றும் வில் யங் களமிறங்கினர். இதில் ரச்சின் ரவீந்திரா 6 ஓட்டங்களிலும், வில் யங் 22 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இதையடுத்து களமிறங்கிய கேன் வில்லியம்சன் ஒருபுறம் நிலைத்து நின்று ஆட மறுபுறம் விக்கெட்கள் விழுந்த வண்ணமிருந்தன.

இதில் டேரில் மிட்செல் 17, ரொம் லேதம் 14, க்ளென் பிலிப்ஸ் 12 , மைக்கேல் பிரேஸ்வெல் 2 ஓட்டங்கள் எடுத்து அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மறுபுறம் நிலைத்து நின்று விளையாடிய வில்லியம்சன் அரைச்சதம் அடித்த நிலையில் 81 ஓட்டங்களில்



ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம் புகுந்த சாண்ட்னெர் 28 ஓட்டங்களிலும்,மேட் ஹென்றி 2 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

இறுதியில் நியூசிலாந்து அணி 45. 3 ஓவர்களில் 205 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதனால், இந்தியா 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அபாரமாக பந்துவீசிய வருண் சக்கரவர்த்தி 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் குரூப் ஏ-வில் முதல் இடத்துக்கு முன்னேறிய இந்தியா இன்று 4ஆம் திகதி டுபாயில் நடைபெறும் அரையிறுதியில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. நியூசிலாந்து அணி நாளை 5ஆம் திகதி நடைபெறும் அரையிறுதியில் தென்னாபிரிக்காவை எதிர்கொள்ளவுள்ளது. (எ)

# இந்திய கிரிக்கெட் அணி மோசமான உலக சாதனை



டுபாய், மார்ச்.04

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து 13 முறை நாணயச்சுழற்சியில் தோல்வியடைந்து இந்தியா மோசமான உலக சாதனை படைத்துள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் இந்தியா 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஒருநாள் கிரிக்கெட்டில் இந்த ஆட்டத்தையும் சேர்த்து இந்தியா தொடர்ச்சியாக 13ஆவது முறையாக நாணயச்சுழற்சியில் தோல்வியைத் தழுவியுள்ளது. இதன் மூலம் தொடர்ச்சியாக அதிக முறை நாணயச்சுழற்சியில் தோற்ற அணி என்ற மோசமான உலக சாதனையை இந்தியா படைத்துள்ளது.

மேலும், இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா தொடர்ச்சியாக சந்தித்த 10ஆவது நாணயச்சுழற்சி தோல்வி இதுவாகும். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக அதிக முறை தோல்விகளைச் சந்தித்த 3ஆவது அணித் தலைவர் என்ற மோசமான சாதனையை ரோஹித் படைத்துள்ளார். (எ)

# 5 விக்கெட் வீழ்த்தி ஹென்றி சாதனை




டுபாய், மார்ச்.04

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் மேட் ஹென்றி 5 விக்கெட்கள் கைப்பற்றினார். இது சாதனையாக பதிவாகியுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் மேட் ஹென்றி 5 விக்கெட்கள் கைப்பற்றினார்.

இதன் மூலம் சம்பியன்ஸ் கிண்ண வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக 5 விக்கெட்கள் கைப்பற்றிய முதல் வீரர் என்ற மாபெரும் சாதனையை மேட் ஹென்றி படைத்துள்ளார். (எ)

# 2ஆவது போட்டியில் 5 விக்கெட் இந்திய வீரர் வருண் சாதனை




டுபாய், மார்ச்.04

நியூசிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வருண் சக்கரவர்த்தி 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் இந்தியா தரப்பில் வருண் சக்கரவர்த்தி 5 விக்கெட்கள் வீழ்த்தினார். அவரே ஆட்டநாயகன் விருதையும் பெற்றார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வருண் சக்கரவர்த்தி தனது 2 போட்டியிலேயே 5 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் ஒருநாள் கிரிக்கெட் வரலாற்றில் விரைவில் 5 விக்கெட்கள் கைப்பற்றிய இந்திய வீரர் என்ற அபார சாதனையை அவர் படைத்துள்ளார். இதற்கு முன்னர் ஸ்டூவர்ட் பின்னி, அவரது 3ஆவது போட்டியில் 5 விக்கெட்கள் கைப்பற்றியதே சாதனையாக இருந்தது. தற்போது அவரை முந்தி வருண் சக்கரவர்த்தி சாதனை படைத்துள்ளார்.(எ)

# முதல் அரையிறுதி இன்று ஆஸி அணியில் மாற்றம்

டுபாய், மார்ச்.04

முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலிய அணிகள் இன்று டுபாயில் மோதுகின்றன. இந்த நிலையில், ஆஸி அணியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

8 அணிகள் இடையிலான 9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினத்துடன் லீக் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்தன.லீக் சுற்று முடிவில் ஏ பிரிவிலிருந்து இந்தியா , நியூசிலாந்து அணிகளும், பி பிரிவிலிருந்து தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியாவும் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதில் இன்று நடைபெறும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் டுபாயில் மோதுகின்றன.

இந்த நிலையில் இந்தத் தொடரின் எஞ்சிய போட்டிகளிலிருந்து அவுஸ்திரேலிய அணியின் மேத்யூ ஷார்ட் காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக கூப்பர் கோனொலி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணி விவரம் வருமாறு, ஸ்டீவ் சுமித் (தலைவர்), சீன் அபோட், அலெக்ஸ் ஹெரி, கூப்பர் கோனொலி, பென் துவார்ஷுயிஸ், நாதன் எல்லிஸ், ஜேக் பிரேசர்-மெக்கர்க், ஆரோன் ஹார்டி, ட்ராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், ஸ்பென்சர் ஜோன்சன், மார்னஸ் லபுஸ்சேன், கிளென் மெக்ஸ்வெல், தன்வீர் சங்கா, அடம் ஸம்பா ஆகியோர் அணியில் இடம் பெற்றுள்ளனர். (எ)

# “நினைத்ததை விட ஆடுகளம் சுழலுக்கு சாதகம்”

டுபாய், மார்ச்.04

நாங்கள் நினைத்ததை விட ஆடுகளம் சுழலுக்கு அதிக சாதகமாக இருந்தது என்று நியூசிலாந்து அணியின் தலைவர் சாண்ட்னர் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் மோதின.

இதில் இந்தியா 44 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் தோல்விக்குப்பின் நியூசிலாந்து அணியின் தலைவர் சாண்ட்னர் கூறுகையில், “நாங்கள் விளையாடிய ஆடுகளம் மெதுவாக இருந்தது. அது எங்களுக்குத் தெரியும். இந்திய பந்து வீச்சாளர்கள் இடைநிலை ஓவர்களை சிறப்பாக வீசினர். ஸ்ரேயஸ் சிறந்த இன்னிங்ஸ் விளையாடினார். ஹர்த்திக் பாண்டியா நன்றாக முடித்தார்.

நாங்கள் நினைத்ததை விட ஆடுகளம் சுழலுக்கு அதிக சாதகமாக இருந்தது. அதை நான்கு தரமான சுழற்பந்து வீச்சாளர்களை வைத்து இந்திய அணி சரியாக பயன்படுத்தியது. பவர் பிளே ஓவர்களில் விக்கெட்களை எடுப்பது எங்களுக்கு வெற்றிக்கான சாவியாகும்.

எங்களுடைய அடுத்த போட்டி லாகூரில் நடைபெறுகிறது. அங்கே ஹென்றி பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவார்.

அங்குள்ள ஆடுகளம் நல்ல வேகம் மற்றும் பவுன்ஸ் இருக்கும். அது போன்ற சூழ்நிலைகளில் தென்னாபிரிக்காவிடம் 4 தரமான வேகப்பந்து வீச்சாளர்கள் இருக்கிறார்கள்.

அவர்களை நாங்கள் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பதை பார்க்க வேண்டும். அது ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட ஆடுகளமா அல்லது புதிதா என்பதை பார்க்க வேண்டும்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய...

செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை பார்வையிடவேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் இந்திய மீனவர்களை சிறிதரன் நேரில் சென்று சந்தித்து கலந்துரையாடினார். (அ)

## தந்தையின்...

சிறுவனின் தந்தை அரிவு வெட்டும் இயந்திரத்தை உழவு இயந்திரத்தில் குறித்த சிறுவனின் தந்தை அரிவு வெட்டும் இயந்திரத்தை உழவு இயந்திரத்தில் ஏற்றிவந்து வீட்டுக்கு முன்னே நிறுத்தி வைத்துள்ளார்.

இதன்போது சிறுவன் உழவு இயந்திரத்தில் ஏறி விளையாடினான். இந்நிலையில் உழவு இயந்திரம் அசைந்தபோது குறித்த சிறுவன் கீழே விழுந்தவேளை சிறுவனின் மீது உழவு இயந்திரம் ஏறியது. இந்நிலையில் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

சிறுவனின் சடலம் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

## அரியாலையில்...

சந்திரசேகரன் தெரிவித்தார்.

சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் , அரசாங்கம் நீதியான விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் வினவியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மயானத்தில் தகனமேடை அமைப்பதற்காக குழி தோண்டப்பட்ட போது மனித எச்சங்கள் வெளிவந்தன. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண நீதிமன்றம் கவனம் செலுத்திய நிலையில் குறித்த இடத்தை நீதிபதி மற்றும் சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் பார்வையிட்டனர்.

அதுமட்டுமல்லாது மீட்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நீதிபதி கலந்துரையாடி எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராய உள்ளதாக அறிந்தேன்.

ஆகவே கடந்த காலங்களைப் போன்று நீதிமன்ற விவகாரத்தில் நாங்கள் தலையிட போவதில்லை அரசாங்கம் என்ற வகையில் நீதித்துறையின் செயல்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்- என்றார். (அ)

## உள்ளூராட்சி தேர்தல்...

பிரதி முதல்வர்கள், தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அற்கமைய, தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நேற்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படுகின்றது.

அத்துடன், 13 ஆம் திகதி போயா தினம், 8, 9 மற்றும் 15, 16 ஆம் திகதிகளில் வரும் சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில், கட்டுப்பணம் செலுத்தமுடியாது.

இதேவேளை வேட்புமனுக்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

## கூட்டணியுடன்...

குறித்து கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒற்றுமை பற்றி தெரிவித்துள்ள விடயங்களில் எக்காலத்திலும் தாங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பவர்கள் அல்ல எனச் சித்தார்த்தன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சில இடங்களிலாவது ஒன்றாகப் போட்டியிடுவது பற்றி ஆராய விரும்பும் நீங்கள், தற்போது நாம் அமைத்துள்ள கூட்டணி உங்களுக்கு ஏமாற்றத்தையும் கவலையையும் அளிப்பதாகவும், உங்கள் கட்சிக்கு தனித்துப் போட்டியிடும் சூழலை உருவாக்கியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டு தேர்தல்களைச் சந்திக்கும் நிலை கடந்த 2023ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிப்பை அடுத்தே ஏற்பட்டது. தனித்துப் போட்டியிட்டு பின்னர் இணைந்து ஆட்சி அமைக்கும் எண்ணக் கருவை தங்களது மக்கிய [illegible] களபப்பில் கூடி எடுத்தீர்கள். இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு தமிழரசுக் கட்சி வெளியேறியது.

பிரிந்து நின்று செயற்படுவதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை ஆணித்தரமாக நாம் முன்வைத்தபோதும் தமிழரசு கட்சியின் செயல் தலைவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மறைந்த சம்பந்தன் அண்ணரிடம் எமது நிலைப்பாட்டை நாம் நேரடியாக முன்வைத்தபோதும் கூட அவரும் தமிழரசுக் கட்சியின் முடிவை ஏற்று செயற்படுமாறு எம்மை அறிவுறுத்தினார்.

அன்று கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர் நாமும் ரெலோ அமைப்பும் இயன்ற வரையிலும் ஏனைய தமிழ் அமைப்புகளை ஐக்கியப்படுத்தி கூட்டமைப்பாகச் செயற்படும் நோக்கில் மேலும் மூன்று அரசியல் கட்சிகளை இணைத்து கூட்டமைப்பாக பயணிக்கத் தொடங்கினோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் அங்கத்துக் கட்சிகளினதும் தொடர்ச்சியான பிளவுகளினால் ஏற்பட்ட மோசமான விளைவுகளைக் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளும் தமிழ் மக்களும் ஆழமாக உணர்ந்து கொண்டோம்.

மேலும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐந்து கட்சிகளாக இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகப் போட்டியிட்ட நாம், நடைபெற இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியத்தின் இருப்புக்கு மிகவும் அவசியமான ஒற்றுமை எனும் விடயத்தை மேலும் வலுவானதாக்க சாத்தியமான வகையில் மேலும் சில அமைப்புகளை இணைத்துப் பயணிக்கத் தீர்மானித்து தொடர்ச்சியாக மேற்கொண்ட செயற்பாடுகளின் பலனாகவே இன்று பல கட்சிகள் இணைந்த கூட்டணியொன்று உருவாகக முடிந்துள்ளது.

நீங்கள் விரும்புவது போல், தமிழரசுக் கட்சியுடன் இந்தக் கூட்டணியும் இணைந்து செயற்படுவதன் மூலம் தமிழ்த் தேசியத்துக்கு மேலும் வலுச்சேர்க்க வேண்டும் என்பதில் நாமும் பெரு விருப்பம் கொண்டுள்ளோம்.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சம்பந்தமாக நடைமுறை சாத்தியமான வகையில் எமது கூட்டணியுடன் பேச்சுக்களை நடத்தக்கூடிய தீர்மானம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மேற்கொண்டு அறியத் தருவீர்களானால் அது பற்றி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுவில் பேசி சாதகமான பதிலை தங்களுக்கு அறியத் தர முடியும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்." - என்றுள்ளது. (அ)

## கிழக்கில்...

அடிப்படையாகக் கொண்டவை என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சில மத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்களை அவதானிக்கும்போது, குறிப்பாக சிறுவர்கள் தீவிரவாத சித்தாந்தங்களுக்கு ஆளாக நேரிடும். இந்த சித்தாந்தங்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முரணானவை.

இதுபோன்ற பெரும்பாலான நடவடிக்கைகள் கல்முனைப் பகுதியிலிருந்து பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும், இந்த விடயம் குறித்து அரச புலனாய்வு சேவை தீவிர கண்காணிப்பை செலுத்தியுள்ளது. நாட்டில் மீண்டும் தீவிரவாதத்திற்கு இடமளிக்க முடியாது.

இதுபோன்ற பிரச்னைகளை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும் எனவும் அதற்கான நாங்கள் பணியாற்றி வருகிறோம்-என்றார். (அ)

## முதலமைச்சர்...

நடத்திய ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபைத் தேர்தல் நடத்துவதாக இருந்தால் தேர்தல் திருத்தம் முதலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் தனிநபர் பிரேரணைகூட கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் 50 வீதம் தொகுதி மற்றும் விகிதாசார முறைக்கு தென்னிலங்கையிலும் கடும் எதிர்ப்பு வலுத்தது. நாங்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தோம்.

இவ்வாறான இழுபறியில் மாகாண சபைத் தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு தயாரில்லை.

கட்சி வழக்கில் உள்ளது. கட்சியில் உள்ளவர்களே வழக்கைத் தாக்கல் செய்திருக்கின்றனர். தாயை நீதிமன்றத்தில் வைத்துக்கொண்டு தாயிடம் உணவு கேட்பதுபோல எமது கட்சி காணப்படுகின்றது.

இவ்வாறான சூழல் இருக்கும்போது முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் இல்லை-என்றார். (அ)

## நான்கு சபை...

சபைக்கான தேர்தல் அண்மையில் நடந்து முடிந்திருப்பதால் அச்சபைக்கான தேர்தல் இப்போது நடைபெறாது.

தற்போது தேர்தல்கள் நடைபெற வேண்டிய உள்ளூராட்சி சபைகளின் பட்டியல் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பட்டியலில் மன்னார் பிரதேச சபை (மன்னார் மாவட்டம்), தெஹியத்தகண்டிய பிரதேச சபை (அம்பாறை மாவட்டம்), பூநகரி பிரதேச சபை (கிளிநொச்சி மாவட்டம்) மற்றும் கல்முனை மாநகர சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களே இப்போது அறிவிக்கப்படவில்லை.

இவை தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருக்கின்ற காரணத்தால் தேர்தல் அறிவிப்புகள் இந்தச் சபைகளுக்கு விடப்படவில்லை.

மன்னார் பிரதேச சபை, தெஹியத்த கண்டிய கண்டிய பிரதேச சபை, பூநகரி பிரதேச சபை ஆகியவற்றுக்காக 2023 இல் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாகவே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கின்றன.

இப்போது அந்த வேட்புமனுக்கள் முழுமையாக இரத்துச் செய்யப்பட்டு விட்டமையால் அந்த வழக்குகளை விலக்கிக் கொள்ளும்படி கோரி நகர்க்கல் [illegible] சமபநதப்பட்ட நீதிமன்றங்களில் தேர்தல் திணைக்களத்தால் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன.

நீதிமன்ற அனுமதி கிடைத்ததும் அவற்றுக்கும் வேட்புமனுக்கள் கோரி, அவற்றுக்கும் சேர்த்து ஒரே சமயத்தில் நாடு முழுவதும் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டு இருப்பதாகத் தெரிகின்றது.

கல்முனை மாநகர சபையைப் பொறுத்தவரை அந்த மாநகர சபையின் எல்லை நிர்ணயம் மீளச் செய்யப்பட வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நிலுவையில் இருப்பதால் அது முடிந்த பின்னரே அங்கு தேர்தல் முன்னெடுக்கப்படும் எனத் தெரிகின்றது.

இவை தவிர்த்த 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகளுக்கான தேர்தல்களே இப்போது அறிவிக்கப்பட்டுள்ளன. (அ)

## பிரச்னைகளுக்கு...

இது குறித்து எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் பிரதித் தலைவர் குசும் சந்தநாயக்க தெரிவிக்கையில்-

எரிபொருள் விநியோகத்தின் ஊடாக பாரிய இலாபம் கிடைக்கப்பெறுவதாக அரசாங்கத் தரப்பினரால் கூறப்படுகிறது. அது உண்மைக்குப் புறம்பானதாகும்.

இதுவரை காலமும் இயங்கிவந்ததை போன்று செயற்படுவதானால் தடையின்றி எரிபொருளை வழங்க முடியும். அவ்வாறில்லாவிட்டால் கடனட்டைகளுக்கு எரிபொருள் வழங்க முடியாமல் போகும்.

அதுமாத்திரமன்றி அரச நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் எரிபொருள் வழங்குவதும் நிறுத்தப்படும். இந்த விடயத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேரடியாக தலையிட்டுள்ளாரா என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். அவர் உரிய தீர்வை பெற்றுக்கொடுப்பார் என நம்புகிறோம்.

அவ்வாறு இல்லாவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம். அங்கேயும் தீர்வு கிடைக்காவிட்டால் எமது நிறுவனங்களை விற்பனை செய்துவிட்டு வேறு தொழில் செய்வதைத் தவிர வேறு வழியில்லை-என்றார். (அ)

## உள்ளூராட்சி...

தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் சி. இரத்தினவடிவேல் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய முதற்கட்டமாக எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு கட்சியின் செயற்பாட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இத்தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட விரும்புபவர்கள் தமது முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், வட்டாரம், அரசியல் செயற்பாடுகளில் கொண்டிருக்கும் அனுபவம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் செயலாளர், இலங்கைத் தமிழரசுக்கட்சி, இலக்கம் 40, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியின் ஊடாக கட்சியின் தலைமைச் செயலகத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது என ஊடமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், தற்போது நாட்டில் தோற்றம் பெற்றிருக்கும் அரசியல் கலாசாரத்துக்கு ஈடுகொடுக்கும் விதமாகவும், கொழும்புவாழ் தமிழ் மக்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டுவரும் கோரிக்கைக்கு செயல்வடிவம் கொடுக்கும் வகையிலும் கட்சியினால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, மலையகத்தில் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் போட்டியிடுவது தொடர்பில் தமிழரசுக் கட்சி இன்னும் எதுவும் அறிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நாளை முதல் போராட்டத்தில் குதிப்பு

## நாளை காலைவரை அரசுக்கு காலக்கெடு

கொழும்பு, மார்ச் 04

**நாடளாவிய ரீதியில் நாளை போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.**

**கொழும்பில் உள்ள அந்த சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று அவசரமாகக் கூடிய மத்திய செயற்குழுவில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் பிரபாத் சுகத தாச தெரிவிக்கையில்-

வரவு-செலவுத் திட்டத்தில் எமக்கு வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டாலும் ஏனைய கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இது குறித்து நாம் ஏற்கனவே ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தோம். எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக அவர் உறுதியளித்தார். எனினும் இதுவரை உரிய தீர்வு கிடைக்கவில்லை.

ஆதலால் நாளை காலை வரை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கு காலக்கெடு விதிக்கிறோம். எமக்கு சாதக மான பதில் கிடைக்காத பட்சத்தில் நாடு முழுவதும் போராட்டத்தை முன்னெடுக் கவுள்ளோம்.

வைத்தியர்களின் தேவை அறிந்து எம்மோடு இணைந்து பயணிப்பதா இல்லையா என் பதை அரசாங்கம் தீர்மானிக்கட்டும்-என்றார். (அ)

# புலனாய்வுத்துறையில் அரசியல் தலையீடு!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 04

அரசியல் தேவைக்காக புலனாய்வுத்துறை சேர்ந்த உயர் அதிகாரிகள் 13பேர் இடமாற்றம் செய்யபட்டுள் ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்தக்குற்றசாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு புலனாய்வுத்துறை என்பது கண்களும் காதுகளும் போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

புலனாய்வுத்துறை பலவீனம் அடைவதுதானது ஒரே நேரத்தில் தேசம் குருடாகவும் செவிடாகவும் மாறுவது போன்றது பயங்கரவாதம் முடிந்துவிட்டது என்று கருதியதால் தான் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அது குறித்து இந்திய புலனாய்வுத்துறை தகவல் தெரிவித்தும் தாக்குதலை தடுக்க முடியவில்லை.

இப்போது வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு புலனாய்வுத்துறை பலவீனப்படுத்தப்பட் டுள்ளது தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் முக்கிய செயற்பாட்டாளர் ஒருவருக்கு பிரதான பதவியை வழங்குவதற்காக புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 13 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் புலனாய்வுத்துறையின் செயல்பாபாடுகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன. இராணுவத்தில் சிரேஷ்ட அனுபவம் மிக்க 13 பேரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டு வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டுள் ளனர்.

புலனாய்வுத்துறையில் அரசியல் தலையீடு காணப் படுகிறது. இதுவரை காலமும் நாட்டில் இவ்வாறான தொரு செயற்பாடு இடம்பெறவில்லை. புலனாய்வுத் துறை பலவீனப்பட்டால் நாட்டில் பேரழிவு ஏற்படும்-என்றார். (அ)

# முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிளின் இல்லத்தில் கைக்குண்டுகள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 04

அநுராதபுரம் - கலென்பிந்துனு வெவ பகுதியில் உள்ள முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் வளா கத்திலிருந்து 341 தோட்டாக்கள் மற்றும் 4 கைக்குண்டுகள் மீட்கப் பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவ லின்படி, குறித்த பகுதியில் மேற் கொள்ளப்பட்ட சோதனை நடவடிக் கையின் போது இவ்வாறு தோட்டாக் கள் மற்றும் கைக்குண்டுகள் மீட்கப் பட்டுள்ளன.

281 ரி -56 தோட்டாக்கள், ஐந்து மகசின்கள் மற்றும் 84 எஸ் துப்பாக் கிக்கான 06 தோட்டாக்கள் உட்பட பெருமளவான தோட்டாக்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, குறித்த கான்ஸ்ட பிள் 2022ஆம் ஆண்டு பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ)

# சாரதிகள் குறித்து முறைப்பாடு செய்ய தொலைபேசி

யாழ்ப்பாணம், மார்ச் 04

இ. போ. ச. பஸ் சாரதிகள் தொடர்பில் முறையிட 1958 என்ற தொலைபேசி இலக்கத் துக்கு தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பஸ் பருவச்சீட்டு உடை யவர்களுக்காக பஸ்ஸை நிறுத் தாமல் செல்லும் சாரதிகள் தொடர்பில் முறையிட இந்த தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்த முடியும். (ஐ)

# ஊடகவியலாளர்களை மிரட்டும்வகையில் நடந்துகொண்ட இளவாலை பொலிஸார்!

## இளவாலையில் 128 கிலோ கஞ்சா மீட்கப்பட்டபோது

யாழ்ப்பாணம், மார்ச் 04

இளவாலை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட மாதகல் பகுதியில் 128 கிலோ எடையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. கொழும்பு இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் தகவலுக்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

பின்னர் கஞ்சா இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, கஞ்சாவைப் பொதி யிடும் நடவடிக்கைகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த செய்தி சேகரிப்பில் ஈடுபடு வதற்காக இரண்டு ஊடகவியலா ளர்கள் இளவாலை பொலிஸ் நிலை யத்துக்கு சென்று தாங்கள் ஊடகவி யலாளர்கள் என அடையாளப்படுத் தினர். பின்னர் செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரினர். நிலையப் பொறுப்பதிகாரி அவர்க ளுக்கு உடனடியாக பதில் கூறாமல் அசண்டயீனமாக செயற்பட்டு இழுத்தடிப்புச் செய்தார். பின்னர் விசேட அதிரடிப்படையினர் சம்மதித்தால் செய்தி சேகரிப்பில் ஈடுபடுங்கள் எனக் கூறினார்.

இதன் பின்னர் விசேட அதிரடிப் படையினரிடம் சென்ற ஊடகவிய லாளர்கள் தங்களை அடையாளப் படுத்திவிட்டு செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதி கோரினர். அதற்கு விசேட அதிரடிப் படையி னர், கஞ்சாவை பொதியிட்ட பின்னர் காணொலி எடுக்கலாம் என கூறினர். அதற்கு சம்மதம் தெரிவித்த ஊடகவியலாளர்கள் வெளியே காத்திருந்தனர்.

இதன்போது இளவாலை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தி யோகத்தர் ஒருவர் அவ்விடத்திற்கு வந்து ஊடகவியலாளர்களை பார்த்து நீங்கள் யார்? ஏன் வந்தீர்கள்? என வினவினார். இதன்போது குறித்த ஊடகவியலாளர்கள் விடயத்தை கூறினர். உடனே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் ஊடகவியலாளர்களை மிரட்டும் விதத்தில் செயற்பட்டார்.

ஊடகவியலாளர்களை கைபேசியை பயன்படுத்த வேண டாம் என்றும், யாருடனும் அழைப்பு எடுத்துப் பேசக்கூடாது என்றும், கைபேசிகளை உள்ளே வைக்குமா றும் மிரட்டினார். அதற்கு குறித்த ஊடகவியலாளர்கள், தாங்கள் தனிப்பட்ட விடயத்துக்கு கைபே சியை பாவிப்பதாக கூறிய பின்னரும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீண்டும் அவர்களை மிரட்டினார். ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதி இல்லை என்பது போலவே குறித்த பொலிஸ் உத்தியோகத்தரின் செயற்பாடுகள் காணப்பட்டன.

இதன்போது பொலிஸ் உத்தியோகத்தரின் அநாகரிகமான செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்த ஊடகவியலாளர்கள் பொலிஸ் நிலையவத்தில் இருந்து வெளியேறினர்.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கஞ்சா, கசிப்பு உள்ளிட்ட பல்வேறு போதைவஸ்துகள் விற்பனை மற்றும் பாவனை இடம்பெற்று வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் பொலிஸார் உரிய கவனம் செலுத்தாமல் இருக்கும்போது இராணுவத் தினரும், விசேட அதிரடிப் படையினருமே பெரும்பாலான கைது நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். பொலிஸாருக்கும் இவ்வாறான குற்றச்செயல்கள் புரிபவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படு கின்றனவா என மக்கள் ஏற்கனவே பல தடவைகள் சந்தேகம் வெளியிட்டனர்.

இவ்வாறான பின்னணியில் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்திய செயற்பாடானது பொலிஸார் தங்களது பிழைகளை மூடி மறைக்க முற்படுகின்றனரா? கஞ்சாவை மீட்ட விசேட அதிரடிப் படையினரே செய்தி சேகரிப்புக்கு அனுமதி வழங்கிய நிலையில் அதனைத் தடுக்கும் செயற்பாட்டில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டது ஏன்? என்ற கேள்வி மக்கள் மத்தி யில் எழுகின்றது. வேறு இடத்தில் இருந்து வருகின்ற விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரால் இவ்வாறான கைதுகள் முன்னெடுக்கப்படும் போது, குறித்த பகுதியில் நிலையாக உள்ள பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ் அதிகாரி களும், பொலிஸ் உத்தியோகத்தர் களும் கைதுகளை முன்னெடுக்காது உள்ளமை மக்கள் மத்தியில் பொலி ஸார் மீது சந்தேகத்தை ஏற்படுத் தியுள்ளது. (அ-05)

# குடு ரொஷானின் மனைவிக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை

கொழும்பு, மார்ச் 04

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள, போதைப் பொருள் கடத்தல்காரரான குடு ரொஷானின் மனை விக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர், விஜயசிங்க ஆராச்சிலாகே நிரோஷா என்று அழைக்கப்படும், 36 வயதான குடு ரொஷானின் மனைவி ஆவார்.

கடந்த 2021 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குடு ரொஷானின் மனைவி, 25 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதனையடுத்து, ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குடு ரொஷா னின் மனைவிக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது.

இந்த நிலையில் குடு ரொஷானின் மனைவிக்கு எதிராக முன்வைக்கப்பட்ட சாட்சிகள் போதுமானதாக இருந்ததால், அவருக்கு ஆயுள் தண்டனை விதித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# கொக்குத்தொடுவாய் புதைகுழி வழக்கு: இறுதியறிக்கை 6 வாரத்தில் சமர்ப்பிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 04

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு எதிர் வரும் 27 ஆம் திகதிக்கு நீதிமன்றால் தவணையிடப்பட் டுள்ளது என சட்ட வைத்திய அதிகாரி க. வாசுதேவா தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு தொடர்பான இறுதி அறிக்கை ஆறு வாரத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

வழக்கு விசாரணைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித் தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org